இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 15.01.2026

தமிழர் தம் பெருநாள்!

“தைஇத் திங்கள் தண்கயம் படியும்” என்று நற்றிணையும் -
“தைஇத் திங்கள் தண்ணிய தரினும்” என்று குறுந்தொகையும் -
“தைஇத் திங்கள் தண்கயம் போல்” என்று புறநானூறும்-
“தைஇத் திங்கள் தண்கயம் போல” என்று ஐங்குறுநூறும்-
“தையில் நீராடி தவம் தலைப்படுவாயோ” என்று கலித்தொகையும்
- பாடும் பெருவிழாதான் பொங்கல் திருவிழா.

முதலாம் இராசேந்திரன் காலத்து திருவொற்றியூர் கல்வெட்டில் ‘புதியீடு விழா’ எனப் பொங்கலைக் குறிக்கிறது. புதியீடு என்பது முதல் அறுவடை எனப்படும். சீவகசிந்தாமணியில், ‘மங்கையர் வளர்த்த செந்தீப் புதுக்கலத்து எழுந்த தீம்பால் பொங்கல்’ என்று வருகிறது. தை நீராடல், தைப் பொங்கல், புதியேடு என இது இலக்கியங்களில் குறிப்பிடப்படுகிறது. சோழர் காலத்தில் புதியேடு என்றே வழங்கப்பட்டுள்ளது.

உழாஅது வித்திய பரூஉக்குரற் சிறுதினை
முந்துவிளை யாணர் நாள்புதிது உண்மார்,
மரையான் கறந்த நுரைகொள் தீம்பால்,
மான்தடி புழுக்கிய புலவுநாறு குழிசி
வான்கேழ் இரும்புடை கழாஅது, ஏற்றிச்,
சாந்த விறகின் உவித்த புன்கம்,
கூதளங் கவினிய குளவி முன்றில்,
செழுங்கோள் வாழை அகல்இலைப் பகுக்கும்
ஊராக் குதிரைக் கிழவ! கூர்வேல்,
நறைநார்த் தொடுத்த வேங்கையங் கண்ணி,
வடிநவில் அம்பின் வில்லோர் பெரும!

என்று புறநானூற்றில் 168 ஆவதாக இடம்பெறுகின்ற பாடலிலே கருவூர்க் கந்தப்பிள்ளைச் சாத்தனார் என்ற புலவர் புதிர் உண்ணுகின்ற செய்தியைப் பதிவு செய்துள்ளார். கேழல் உழுத புழுதியிலே விதைத்த திணையும் விளைந்து கதிர் முற்றியது. நல்ல நாளிலே பாலை உலைநீராக்கிச் சந்தன விறகால் எரித்து, அத்தினையைச் சமைத்து, அகன்ற வாழை இலையிலே பலரோடும் பகுத்துண்ணும் வளமுடைய குதிரைமலைத் தலைவனே என்று சொல்கிறது இப்பாடல்.

“புழுக்கலும் நோலையும் விழுக்குடை மடையும்
பூவும் புகையும் பொங்கலுஞ் சொரிந்து” என்கிறது சிலப்பதிகாரம். புழுக்கல் என்றால் பொங்கல்.

மணிமேகலை காப்பியத்தில், இந்திர விழா என்ற பெயரில் பொங்கல் கொண்டாடப்பட்டது. அக்காலத்தில், காவிரி பூம்பட்டினத்தில், மன்னர்கள், மக்களுக்கு முரசறைந்து, பொங்கல் விழா வரவிருப்பதை அறிவிப்பார்கள். அக்காலத்தில் பொங்கல் விழா இருபத்தெட்டு நாட்கள் வரை நடந்திருக்கிறது.

சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை - என்கிறார் வள்ளுவர். எத்தனையோ தொழில்கள் இருந்தாலும் உழவுக்கு அடிப்படையான ஏர் தான் இந்த உலகுக்கே அடிப்படை என்கிறார் வள்ளுவர். இதுதான் பொங்கல் திருநாளுக்கும் அடிப்படையாக அமைந்துள்ளது.

விதைத்ததை அறுவடை செய்து பயன்பெறும் தை மாதத்தின் தொடக்கமே பொங்கல். புதிய அரிசியை புதுப்பானையில் போட்டுப் பொங்கி சூரியனுக்கும் பூமிக்கும் படையலிட்டுத் தொடங்கும் மாதம் இது. மண்ணின் விளைச்சலில் கிடைக்கும் அனைத்துக் காய்கறிகளும் படையலாக வைக்கப்படுகின்றன. அறுவடைக்குத் துணை புரிந்த மாடுகளாம் அனைத்து உயிரினங்களையும் வணங்கும் நாள் இது.

‘பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல்’ என்று கலித்தொகை ஒரு விளக்கம் தருகிறது. அத்தகைய பண்பாட்டை அடையாளப்படுத்தும் விழாதான் பொங்கல் திருவிழா.

“தமிழ்நாட்டின் பெரும் நிலப்பரப்பு விவசாயம் சார்ந்த உற்பத்தி முறைக்கு ஏற்றதாக இருந்ததால் தமிழ்ச் சமூகம் வேளாண்மை சார்ந்த நிலவுடைமைச் சமூகமாக உருப்பெற்றது. விவசாய நிலங்களின் பண்பாடு மற்ற திணைக்குரிய சிறுபான்மை நிலப்பகுதிகளிலும் தாக்கம் செலுத்தியது. எனவே மருதத் திணையில் அறுவடைக் காலக் கொண்டாட்டங்கள் மற்ற திணை சார்ந்த மக்களிடம் பரவியது. இதனால் மருத நில மக்களின் அறுவடைக் கொண்டாட்டமான பொங்கல் விழா தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த பண்பாட்டின் அடையாளமாக மாறியது. இப்பொங்கல் விழாவுடன் தொடர்புடைய பண்பாட்டுக் கூறுகள் தமிழர்களின் அடையாளங்களாக நிலைபெற்றன” என்று ஆய்வாளர்கள் குறிப்பிடுவார்கள். அந்த வகையில் ஒட்டுமொத்த தமிழர் தம் பெருவிழாவாக இது அமைந்து விட்டது.

பொங்கு என்றால் பொங்குதல், கொதித்தல், சமைத்தல், செழித்தல் எனப் பொருள்படும். பொங்குவதால் பொங்கல். தமிழர்கள் இனக்குழுவாக இருந்த காலம் முதல் நடத்தப்படும் திருவிழா இது. இயற்கையை வணங்குதல் என்பதே இதன் உள்ளடக்கமாக இருந்தது.

அதே உணர்ச்சியோடும் மகிழ்ச்சியோடும் தான் இப்போதும் பொங்கல் திருநாள் கொண்டாடப்படுகிறது. இக்காலத்தில் மண் செழித்துள்ளது. விளைச்சல் அதிகரித்துள்ளது. பாசனப்பரப்பு அதிகரித்துள்ளது. உற்பத்தி அதிகமாகி உள்ளது. வறட்சி என்பதே இல்லை. மழை, பருவத்தே பெய்து வருகிறது. உழவர்கள் மகிழ்ச்சியோடும் மனநிறைவோடும் இருக்கிறார்கள். ‘எல்லார்க்கும் எல்லாம்’ என்ற உன்னதமான நோக்கம் கொண்டவராக மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செயல்பட்டு வருவதால் அனைத்து மக்களும் மகிழ்ச்சியுடனும் மனநிறைவுடனும் வாழ்கிறார்கள்.

தமிழ் நாட்டு மக்கள் அனைவர் உள்ளங்களிலும் மகிழ்ச்சி பொங்கும் பொங்கும் வகையில் பொங்கல் பரிசு அறிவித்துள்ளார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ.3,000 பொங்கல் பரிசுத் தொகை என்ற முதலமைச்சரின் அறிவிப்பு இந்த ஆண்டின் தொடக்கத்தையே மகிழ்ச்சிக்குரிய தாக மாற்றி இருக்கிறது. தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகையை சிறப்பாகக் கொண்டாடிட இப் பரிசுத் தொகை வழங்க முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டு உள்ளார்கள். தமிழ்நாட்டில் மொத்தம் 2 கோடியே 22 லட்சத்து 91 ஆயிரத்து 710 அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள் இருக்கிறார்கள். இவர்கள் பெற்றுள்ளார்கள்.

இப்பொங்கல் காலத்தில்தான் ஏறுதழுவுதல் என்ற விளையாட்டுப் போட்டிகளும் காலம் காலமாக நடத்தப்பட்டு வருகிறது. அவை பண்பாட்டின் அடையாளங்களாகவும், பண்பாட்டின் நீட்சியாகவும் நடைபெற்று வருகின்றன. இத்தகைய பண்பாட்டு விளையாட்டை நடத்துவதற்காக மதுரையில், ‘கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கம்’ கட்டி எழுப்பப்பட்டுள்ளது. தமிழர் தம் பெருமையை நிலைநாட்டும் வகையில் கீழடி, பொருநை அருங்காட்சியகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பொங்கல் விழாவை கலை விழாக் காலமாக, குறள் விழாக் காலமாக மாற்றி இருக்கிறார் முதலமைச்சர் அவர்கள்.

ஞாயிறு போற்றுதும்
ஞாயிறு போற்றுதும்
ஞாயிறு போற்றுதும்

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (13.1.2026) தலைமைச் செயலகத்தில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் சந்தித்து, தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கு, “தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் (TAPS)” அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்தார். உடன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன், மாநில செயற்குழு உறுப்பினர்கள் கே.கனகராஜ், டி.ரவீந்திரன் ஆகியோர் உள்ளனர்.

மலைசூழ் மாநகர் திருவண்ணாமலையில் ஐந்து கட்டங்களாக

அருணை தூய்மைப்பணி! மக்கள் அமோகப் பாராட்டு!

பொங்கல் பரிசுகளை வழங்கி அமைச்சர் எ.வ.வேலு பேச்சு!

திருவண்ணாமலை, ஜன. 15–

திருவண்ணாமலை மாநகரில் தூய்மை அருணை அமைப்பு ஐந்து கட்டங்களாக மக்கள் பணியை செய்து வருகிறது என்று, தூய்மை அருணையின் ஒருங்கிணைப்பாளர்கள், தூய்மைக் காவலர்கள் ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு பொங்கல் பரிசுகள் வழங்கும் விழாவின்போது பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு பேசும்போது குறிப்பிட்டார்.

‘திருவண்ணாமலையில் தொண்டு செய்வோம், துணை நிற்போம்’ என்ற முழக்கத்தோடு கடந்த 7 ஆண்டுகளாக பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்களை அமைப்பாளராகக் கொண்டு, தூய்மை அருணை திட்டம் செயல்பட்டு வருகிறது. தூய்மை அருணை திட்டத்திற்கு 4 மேற்பார்வையாளர்களும், 39 வார்டுக்கு 39 ஒருங்கிணைப்பாளர்களும், மாட வீதி தூய்மைப் பணிக்கு 7 ஒருங்கிணைப்பாளர்களும் ஒவ்வொரு வார்டுக்கும் 25 தூய்மைக் காவலர்கள் என ஆயிரக் கணக்கானோர் மரம் நடுதல், பராமரித்தல், கால்வாய் மற்றும் தூர் வாருதல் என செயல்பட்டு வருகின்றனர்.

அதனை தொடர்ந்து மாதந்தோறும் கர்ப்பிணி பெண்களுக்கு வளைகாப்பு விழாவை கடந்த ஜூலை மாதம் பொதுப்பணித்துறை அமைச்சர் தொடங்கி வைத்தார்.

14.01.2026 புதன்கிழமை காலை 7.30மணிக்கு, திருவண்ணாமலை, மலப்பாம்பாடியில் உள்ள கலைஞர் திடலில் தூய்மை அருணையின் ஒருங்கிணைப்பாளர்கள், தூய்மைக் காவலர்கள் என 1200க்கும் மேற்பட்டோருக்கு பொங்கல் பரிசுகள் வழங்கும் விழா நடைபெற்றது.

விழாவிற்கு தூய்மை அருணையின் மேற்பார்வையாளர் டாக்டர் எ.வ.வே.கம்பன் தலைமை வகித்தார்.

தூய்மை அருணையின் மேற்பார்வையாளர்கள் சி.என்.அண்ணாதுரை.எம்.பி., இரா.ஸ்ரீதரன், சட்டமன்ற உறுப்பினர் மு.பெ.கிரி, பிரியா விஜயரங்கன், இல.குணசேகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தூய்மை அருணை மேற்பார்வையாளர் ப.கார்த்திவேல்மாறன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

விழாவில் கலந்து கொண்டு தூய்மை அருணை ஒருங்கிணைப்பாளர்கள், தூய்மைக் காவலர்கள் 1200க்கும் மேற்பட்டோருக்கு பொங்கல் பரிசுகள் வழங்கி, தூய்மை அருணையின் அமைப்பாளரும், பொதுப்பணித்துறை அமைச்சருமான எ.வ.வேலு அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:–

திருவண்ணாமலை ஒரு ஆன்மீக நகரம், இம்மாநகருக்கு வெளிநாடு, வெளி மாநிலம், வெளியூரிலிருந்து இலட்சக்கணக்கான ஆன்மீகப் பக்தர்கள் வருகைத் தருகிறார்கள். திருவண்ணாமலை மாநகரம் தூய்மையாக இருக்க வேண்டுமென்பதற்காக 2017ஆம் ஆண்டு இந்த அமைப்பு தொடங்கப்பட்டது. இந்த அமைப்பின் சார்பாக மஞ்சள் சீருடை அணிந்த 1000க்கும் மேற்பட்ட தூய்மைக் காவலர்கள் ஒவ்வொரு ஞாயிறும் தூய்மை பணி, கால்வாய் தூர் வாருதல் என செயல்பட்டு வருகின்றனர்.

இரண்டாம் கட்டமாக அருணை மாநகர் மலையால் சூழ்ந்துள்ளதால் இங்கு வெப்பம் அதிகமாக உள்ளது. எனவே சுற்றுச்சூழலைச் சமன்படுத்த மரம் நடுதல் என்ற திட்டத்தை கடந்த 8 வருடங்களாக மரம் நடுதல், பராமரித்தலை செய்து வருகிற காரணத்தினால்தான் இன்றைக்கு திருவண்ணாமலை மரங்கள் நிறைந்த மாநகரமாக உள்ளது.

திருவண்ணாமலை தூய்மை அருணை அமைப்பின் ஒருங்கிணைப்பாளர்கள், தூய்மைக் காவலர்களுக்கு பொங்கல் பரிசுகளை பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு வழங்கினார். உடன் டாக்டர் எ.வ.வே.கம்பன், சி.என்.அண்ணாதுரை, எம்.பி., இரா.ஸ்ரீதரன், மு.பெ.கிரி.எம்.எல்.ஏ., ப.கார்த்திவேல்மாறன், பிரியா விஜயரங்கன், இல.குணசேகரன் உட்பட பலர் உள்ளனர்.

மூன்றாவது கட்டம் என்னவென்றால், ஒவ்வொரு தாய்மாரும் தன் வாரிசை ஆரோக்கியமாக பெற்றெடுக்க வேண்டுமென்று விரும்புவர். அவர்களின் கனவை நிறைவேற்றத்தான் தூய்மை அருணை அமைப்பு, அருணை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையுடன் இணைந்து கர்ப்பிணித் தாய்மார்களுக்கு வளைகாப்பு நடத்திடும் நிகழ்ச்சியை நடத்தி வருகிறது. இதனால் 600 பிரசவங்கள் நடைபெற்று, தாயும்சேயும் நலமுடன் வாழ்ந்து வருகின்றனர். அருணை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பிரசவத்திற்கும் இலவசம், ஒரு வருடத்திற்கு குழந்தைகளுக்கான சிகிச்சை செலவும் இலவசம். அதனோடு டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி திட்டத்தின்கீழ் ரூ.18000யும் பெற்றுத்தருகிறது இந்த அமைப்பு.

மக்கள் அமோகப் பாராட்டு!

நான்காவது கட்டம், நம் உயிர் காக்கும் நீர் நிலைகளை பாதுகாப்பது என்ற அடிப்படையில் அய்யங்குளத்தை நாம் கணக்கில் எடுத்துக் கொண்டோம். இந்த அய்யங்குளம் 500 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்டு, பராமரிக்கப்பட்டு வந்தது. இங்குதான் அண்ணாமலையார் தீர்த்தவாரி நடைபெறுகிறது. மேலும், தீபத்திருவிழாவின் ஒருக்கட்டமாக தெப்பல் திருவிழா நடைபெறும். நமது முன்னோர்களின் கடனான தர்ப்பனம் இங்குதான் நடைபெறுகிறது. இந்த அய்யங்குளம் சேறும், சகதியுமாக இருந்தது. அதை தூய்மை அருணை சார்பில் தூர்வாரி, படிக்கட்டுகள் அமைத்து மக்களின் அமோகப்பாராட்டுதல்களை பெற்றுள்ளது.

ஐந்தாவது கட்டம் என்னவென்றால், நம்முடைய பழைய அரசு மருத்துவமனை எதிரிலிருந்த ஒரு மிகப்பழமையான கட்டத்தை அப்புறப்படுத்தி, அங்கு ஒரு திருமண மண்டபம் அல்லது சமுதாயக்கூடம் என்று எப்படி வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம் அதை கட்டினோம். அதை துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின் திறந்து வைத்தார். அந்த திருமண மண்டபம் பொதுமக்களுக்கு, குறிப்பாக ஏழைகளுக்கு பயன்பட வேண்டுமென்று, அதை தூய்மை அருணை அமைப்பு மாநகராட்சியிடமிருந்து ஒப்பந்தம் பெற்று, மக்களுக்கு இலவசமாக அளித்துக் கொண்டிருக்கிறது. முதலில் வந்து யார் பதிவு செய்கிறார்களோ அவர்களுக்கு வழங்கப்படுகிறது.

இப்படி ஐந்து கட்டங்களாக தூய்மை அருணை அமைப்பு மக்கள் பணியைச் செய்து வருகிறது. இப்படியொரு அமைப்பு தமிழ் நாட்டில் எங்குமில்லை என பாராட்டி வருகின்றனர்.

தை முதல் நாளே தமிழர்களின் ஆண்டு தொடங்குகிறது என்று தமிழறிஞர்களின் வாக்கினை நிறைவேற்றியது நமது அரசு. உழவன் சேற்றில் கை வைத்தால்தான், நாம் சோற்றில் கை வைக்கமுடியும். இந்த அற்புதமான தைத்திருநாளை அனைவரும் மகிழ்ச்சியுடன் கொண்டாடுவோம். பொங்கலோ பொங்கல்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் உரையாற்றினார்.

பங்கேற்றோர்!

விழாவில் மாட வீதி ஒருங்கிணைப்பாளர்கள் துரை.வெங்கட், சினம் பெருமாள், ஜீவரேகா விஜயராஜ், ஆர்.கே.பாஸ்கர், ஒருங்கிணைப்பாளர்கள் அ.கோவிந்தன், செ.எழில்மாறன், எஸ்.கண்ணதாசன், ஏ.ஏ.ஆறுமுகம், டி.எல்.எம். வினோத்குமார், எஸ்.கே.டி.வீரா, வழக்கறிஞர் ம.செந்தில், சு.விஜி (எ) விஜயராஜ், ஆர்.கிருஷ்ணமூர்த்தி, பா.அரிகிருஷ்ணன், சு.ராஜாங்கம், வழக்கறிஞர் ந.சீனுவாசன், இரா. அருண், மெட்ராஸ் கே.சுப்பிரமணி, காலேஜ் கு.ரவி, கு.காளிதாஸ், குட்டி க.புகழேந்தி, சி.சண்முகம், பி.ஆர். நாகராஜ், கு.குமார், மண்டி ஆ.பிரகாஷ், மு.கருணாமூர்த்தி, இரா.இராஜாமணி, அ.திவாகர், ரமணா ஜி. பழனி, க.பிரகாஷ், பி.ஜி.முருகன், கே.கோபி.சங்கர், சென்னை சுரேஷ், ஏ.முபாரக், லயன் பா.ஷெரீப், க.ஏழுமலை, எஸ்.ஜாகீர் உசேன், இரா. ஜோதி, கு.தியாகு, மூ.காமேஷ், மு.ஹக்கிம் சேட், சி.கே.சசிக்குமார், கோல்டு எஸ்.பிரபு உட்பட பலர் கலந்து கொண்டனர்.

சென்னை அமைந்த கரையில் அமைந்துள்ள செயின்ட் ஜார்ஜ் பள்ளி வளாகத்தில் பொங்கல் திருநாளை முன்னிட்டு அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே. மோகன் மற்றும் தகவல் தொழில் நுட்ப அணி துணைச் செயலாளர் கார்த்திக் மோகன் ஏற்பாட்டில் அண்ணா நகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 915 கழக நிர்வாகிகளுக்கு நலத்திட்ட உதவிகளை பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி வழங்கினார். இந்நிகழ்வில் சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், அண்ணா நகர் பகுதிச் செயலாளர்கள் ராமலிங்கம் மற்றும் பரமசிவம், தொகுதி பார்வையாளர் கௌதமன் உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.